கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.184/2023

அ.சா.4  (LW 4 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மைக்கேல் ஜெயபால் | **தொழில்** | |
| **த/க  பெயர்** | ஆரோக்கியதாஸ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு  10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திண்டுக்கல் சுப்புராம் பட்டறை பின்பக்கம்  குடியிருந்து வருகிறேன்.  நான் முருகபவனம் பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன் . ஆஜர் எதிரியை தெரியாது. அழகுபாண்டியை  தெரியாது. கடந்த 08.06.2023 அன்று நான் திண்டுக்கல் முருகபவம் பெட்ரோல் பங்கில் வேலை  செய்து கொண்டிருந்த போது 3வது சந்தில் வாடிக்கையாளர்களுக்கு பெட்ரோல் போட்டுக் கொண்டிருந்தேன். அப்போது நான் முன்னாடி சென்று பார்த்த போது இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் மல்லாக்க கிடந்தார். தலையில் இரத்தம் போய்க் கொண்டிருந்தது. உடனே நான் சர்வீஸ் மேனேஜரிடம்  தகவல் சொன்னேன். அவர் ஓனருக்கு  தகவல் தெரிவித்தார்.  கீழே உள்ள நீதிபதியிடம் இரகசிய வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது கூறியதைத்தான் நீதிபதியிடம் அப்போதும் கூறினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். 164 வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். **அந்த கையொப்பங்கள் மட்டும் அ.த.சா.ஆ. 4 ஆகும்.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்கசு எந்த சத்தமும் கேட்கவில்லை. போலிசார் அங்கு வந்து என்ன நடந்தது என்று சொல்லிய பிறகு தான் சம்பவம் பற்றி

**எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற இரகசிய வாக்குமூலத்திலும் சொன்னேன் என்றால் சரிதான்.**

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.16 20:28:52 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.